Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 25, 2022

புதன்கிழமை மே 25, 2022 | ஒளி: 08 கதிர்: 005 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

விலைகளின் ஏற்றம்

# கழுத்தை நெரிக்கிறது

அத்தியாவசியமான பொருட்கள், சிற்றுண்டிகள், உணவுப்பொதிகள் உள்ளிட்டவற்றின் விலைகள் ஒரேநாளில் அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். பொருட்களின் விலைகள் மட்டுமன்றி, சேவைகளின் கட்டணங்களும் எகிறிநிற்கின்றன.

தொடர்ச்சி P2

ஒரு லீற்றர் பெட்ரோல் 137 சதவீதம் அதிகரிப்பு



## உணவுப்பொதிகள் குறுகின; விலைகள் நீண்டன

உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் விற்பனை செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளையும் 10 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக மரக்கறிகள், இறைச்சி, பாற்பொருட்கள், முட்டை, மீன் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கூடியது ஓட்டோ

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு அமைய, ஓட்டோ கட்டணத்தை அதிகரிக்க அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானத்துள்ளது.

தொடர்ச்சி P2

ஒரு லீற்றர் டீசல் 230 சதவீதம் அதிகரிப்பு

6 மாதங்களில் 367 சதவீத அதிகரிப்பு



## கூடிய கட்டணம் 4,025 ரூபாய்

நேற்று (24) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் அனைத்து பஸ் கட்டணங்களையும் 19.5% ஆல் அதிகரிக்கப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதுடன், ஆகக் குறைந்த கட்டணத்தை 32 ரூபாயாக அதிகரிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



‘ஒரே நாடு ஒரே சட்டம்’

## செயலணியின் அறிக்கை அடுத்தவாரம்

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் மூலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த தரவுகள் சேகரிக்கும் பணிகள் மற்றும் வாக்குமூலங்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் பணிகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடத்தில் கையளிக்கப்படும் என தெரிவிக்க ப்படுகின்றது.

தொடர்ச்சி P2







## நீச்சல் தடாகமாகின பரீட்சை நிலையங்கள்

■ ரஸீன் ரஸ்மின்,ஹிரான் பிரியங்கர ஜயசிங்ஹ

நாடளாவிய ரீதியில் கல்விப் பொதுத் தராதர பரீட்சைகள் நடைபெற்று வருகின்ற நிலையில், சில மாவட்டங்களில் சீரற்ற வானிலை நிலவி வருகின்றது. புத்தளம் மாவட்டத்தில் பெய்த கனமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தால் தாழ்நிலங்கள் நிரம்பின. பரீட்சை மத்திய நிலையங்களின் அண்மித்த பிரதேசங்கள், செல்லும் வழிகள் வெள்ள நீரில் மூழ்கின.

தொடர்ச்சி P2



நாட்டிற்கான அந்நியச் செலாவணியை கொண்டுவர

## இலங்கை இராணுவம் முயல்கின்றது

நாடு பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில், நாட்டு மக்களுக்கு அவசியமான பாதுகாப்பை வழங்கும் இலங்கை இராணுவம், நாட்டுக்கு அவசியமான அந்நியச் செலாவணியை கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகளையும் தொடர்ச்சியான முன்னெடுத்து வருவதாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புத்தளம் வெள்ளத்தில் 20,122 பேர் பாதிப்பு

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் மாவட்டத்தில் நேற்று (24) அதிகாலை முதல் பெய்த கனமழையால், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம், 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எரிபொருள் விநியோகம் வரையறுக்கப்பட்டது

■ மகேஸ்வரி விஜயனந்தன்

வாகனங்களுக்கான எரிபொருள் விநியோக வரையறைகளில் நேற்று (24) முதல் அமலாகும்வகையில்

தொடர்ச்சி P2

21ஆம் திருத்த சட்டத்தில்

இரட்டை பிரஜாவுரிமை விவகாரம்:

## அரசாங்கத்துக்குள் மீண்டும் குழப்பம்

■ ஆர்.யசி

அரசியலமைப்பின் 21 ஆம் திருத்த சட்டத்தை அடுத்தவாரம் பாராளுமன்றத்தில் சபைப்படுத்தவுள்ள நிலையில், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள இரட்டை பிரஜாவுரிமை நபர்கள் அரசியலில் ஈடுபட முடியாது என்ற

தொடர்ச்சி P2

அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்வது



## மத்தியகுழுவின் தீர்மானத்துக்கு முரண்

தற்போதைய அரசாங்கத்தில் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு முரணானது என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

டொலரை கொள்வனவு செய்ய

## ரூபாயும் இல்லை



- மத்திய வங்கியின் ஆளுநர் நிதிக்குழுவில் தெரிவிப்பு;
- கடன் எல்லையை ட்ரில்லியன் ரூபாய் வரை அதிகரிப்பது தொடர்பான பரிந்துரை

நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய இக்கட்டான சூழ்நிலையின் உண்மை யதார்த்தத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு குறுகிய அரசியல் லாபம் இன்றி, கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குமாறும்


தொடர்ச்சி P2

## ராஜபக்ஷர்கள் மாலைத்தீவுக்கு தப்ப முயற்சியா?

**விமர்சிக்கின்றது மாலைத்தீவு ஊடகம்; மறுக்கிறார் நாமல்**

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பாதுகாப்பான தங்குமிடம் ஒன்றை வழங்குவதற்காக மாலைத்தீவின் சபாநாயகர் மொஹமட் நஷீட் தரகு வேலைகளை செய்து வருவதாக மாலைத்தீவைச் சேர்ந்த ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ள நிலையில், அதனை முற்றாக மறுத்துள்ள நாமல் ராஜபக்ஷ,

தொடர்ச்சி P2



அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கிய

## 500 கொள்கலன்களை விடுவிக்க முடியாத நிலை

அத்தியாவசியப் பொருட்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க நாணயக் கடிதம் மூலமாக பணம் செலுத்த முடியாதுள்ள காரணத்தால் அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கிய சுமார் 500

தொடர்ச்சி P2

# கழுத்தை நெரிக்கிறது

விடிவதற்கு முன்னர் எரிபொருட்கள் விலைகள் அதிகரிக்கப்பட்டமையால், விடிந்து எழுந்து கண்களைத் திறப்பதற்குள் பொருட்களின் விலைகள், சேவைகளின் கட்டணங்கள் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளன. இதுவரையிலும் தாங்கிக்கொண்டிந்த சாதாரண மக்களால், நேற்றை (24) அதிகரிப்பை தாங்கிக்கொள்ள முடியாதுள்ளது.

பல பங்கங்களிலும் விலைகள், கட்டணங்கள் அதிகரித்தமை, ஒவ்வொருவரின் கழுத்தையும் நெரிக்கத்தொடங்கிவிட்டது. இலங்கையை பொறுத்தவரையில், ஒரேநாளில் எவ்விதமான பேரம் பேச்சுக்கள், பேச்சுவார்த்தைகள் இன்றி, தாங்கள் நினைத்தப்படி விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றை பொறுத்தவரையில், மண்ணெண்ணெய் தவிர அனைத்து வகையான எரிபொருட்களின் விலைகளும் முதல்முறையாக 400 ரூபாயைக் கடந்துள்ளன. அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்ட எரிபொருள் சூத்திரத்துக்கு அமைய நேற்று (24) அதிகாலை 3 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை மீண்டும் திருத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தனது டுவிட்டர் பதிவின் மூலம் அதிகாலையில் அறிவித்திருந்தார்.

அதற்கமைய ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 82 ரூபாயால் அதிகரித்து 420 ரூபாயாகவும், ஒரு லீற்றர் 95 ஒக்டேன் பெற்றோலின் விலை 77 ரூபாயால் அதிகரித்து 450 ரூபாவாக உயர்துள்ளது. ஒரு லீற்றர் ஒட்டோ டீசல் 111 ரூபாய் அதிகரித்து 400 ரூபாயாகவும், ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 116 ரூபாயால் அதிகரித்து 445 ரூபாயாகவும் திருத்தப்பட்டுள்ளது.

இறக்குமதி, கப்பலிலிருந்து இறக்குதல், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகம் செய்யும் போது ஏற்படும் அனைத்து செலவுகள் மற்றும் வரி ஆகியவை இந்த விலைத் திருத்தத்தில் உள்ளடங்குவதாகத் தெரிவித்த அமைச்சர், இலாபங்கள் கணக்கிடப்படவில்லை அல்லது உள்ளடக்கப்படவில்லை என்றார்.

இதேவேளை, போக்குவரத்து மற்றும் இதர சேவைக் கட்டணங்களை பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அல்லது மாதந்தோறும் திருத்துவதற்கான சூத்திரத்துக்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த ஆறுமாதங்களில் ஒரு லீற்றர் டீசலின் விலை நூற்றுக்கு 230 சதவீதத்தினாலும், பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை நூற்றுக்கு 137 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப்பொதிகள் குறுகின; விலைகள் நீண்டன

கிட்டத்தட்ட 60 சதவீத பொதுமக்களால் உணவு பெற முடியவில்லை என்றும் நேற்றைய எரிபொருள் விலை உயர்வு மேலும் பட்டினி மற்றும் பஞ்சத்துக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரச மற்றும் தனியார் ஊழியர்கள் மற்றும் நாளாந்த ஊதியம் பெறுபவர்களுக்கு உணவளிப்பதை சிற்றுண்டிச்சாலை கைத்தொழில் உறுதி செய்வதால், தொழில் நலிவடைவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நுகர்வோர் மற்றும் தொழில்துறையை கருத்தில் கொண்டு விலையை 10 சதவீதம் மட்டுமே உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், விலைக்கேற்றவகையில் உணவுப்பொதிகளில் உணவுகள் இல்லையென நுகர்வோர் தெரிவிக்கின்றன. சில பொதிகளில் ஒரு நேரத்துக்கு போதுமான உணவுகள் இருப்பதில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# கூடிய கட்டணம் 4,025 ரூபாய்

அதற்கமைய ஆகக் குறைந்தபட்ச பஸ் கட்டணம் 27 ரூபாயில் இருந்து 32 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஆகக் கூடிய கட்டணம் 3370 ரூபாயிலிருந்து 4025 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் ஆகியவற்றுக்கே கட்டணங்களை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு நேற்று (24) நண்பகலுக்குள் பஸ் கட்டண திருத்தத்தை அறிவிக்குமாறு கடிதம் மூலம் வலியுறுத்தவுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அறிவித்திருந்தார்.

20 வருடங்களாக விலைச்சூத்திரம் நடைமுறையில் இருப்பதாகத் தெரிவித்த அவர், அது நடைமுறைப்படுத்தப்பட்டால், டீசல் விலையேற்றத்திற்கு ஏற்ப பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு லீற்றர் டீசலின் விலையை 111 ரூபாவினால் அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானமானது தனியார் பஸ் தொழிற்துறைக்கு எவ்வகையிலும் சாத்தியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# கூடியது ஓட்டோ

முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் 90 ரூபாயாக அதிகரிக்கப்படும் அதே வேளையில் மேலதிகமான ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் 80 ரூபாயாக கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது. கட்டண உயர்வு போதுமானதாக இல்லாவிட்டாலும், பயணிகளைக் கருத்தில் கொண்டு, தங்கள் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது. நிலைமையை அவதானிப்பதாகவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## மத்தியகுழுவின்...

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்வது குறித்து கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதானது,

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளாது பொதுமக்களின் நலன்களுக்காக எடுக்க வேண்டிய சகல தீர்மானங்களின்போது பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஒத்துழைப்புக்களை வழங்குவதே கட்சியின் மத்தியகுழுவில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

புதிய பிரதமரின் கீழ் சர்வகட்சி அரசாங்கம் உருவாக்கப்படல் மற்றும் அது செயற்பட வேண்டிய விதம் குறித்து பரந்த அளவிலான யோசனையொன்றை கட்சி நாட்டுக்கு முன்வைத்துள்ளது. இந்த யோசனையை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான கட்சிகள், தேர்தல்கள் ஆணைக்குழு என்பன சாதகமான யோசனையாக ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பௌத்த மதத்தலைவர்கள், சட்டத்தரணிகள் சங்கம், சிவில் அமைப்புகள், வர்த்தகத்துறையினர் மற்றும் சசர்வதேச சமூகம் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நாட்டுக்காக முறையான யோசனையொன்றை முன்வைத்துள்ள நிலையில் பாராளுமன்ற கட்சி தலைவர்களுக்கு காரணத்தை கூறாது மீண்டும் வழமையான அரசாங்கம் ஒன்றினை உருவாக்கி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குவதும் அதனை பெற்றுக்கொள்வதும் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்திற்கு முரணானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை ...

மாலியில் உள்ள எமது படையினர், களநிலவரத்தை பொருட்படுத்தாமல், கடினமானபணியைச் செய்கிறார்கள். இவ்வாறு எங்கள் படையினரின் தொழில்முறை தரம் மற்றும் அவர்களின் சிறந்த பணிகளின் மூலம் ஈர்க்கப்பட்ட ஐ.நா அமைதிகாக்கும் பிராந்திய தளபதிகள் தங்களது பாராட்டுகளை எமது படையினருக்கு தெரிவித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## புத்தளம் வெள்ளத்தில்...

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## செயலணியின் அறிக்கை அடுத்தவாரம்

நாடு பூராகவும் நாம் சென்று சகல மக்களின் கருத்துக்களையும் பதிவு செய்து தரவுகளை சேகரித்து அறிக்கையொன்றை தயாரித்துள்ளதாகவும், எமது அறிக்கை மிக பலமானது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித வணக்கத்துக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் முழுமையான அறிக்கை தற்போதைய நாட்டின் நிலைமையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## 500...

கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் சிக்கியுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க நாணயக் கடிதம் மூலமாக பணம் செலுத்த முடியாதுள்ள நிலையில் திறந்த கணக்கு முறையின் ஊடாக இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ள இறக்குமதியாளர்கள், இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ரூபாவும் இல்லை

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அரசாங்க நிதி பற்றிய குழுவில் கோரிக்கை விடுத்தார். அதேநேரம், எங்கிருந்தாவது டொலர்களைப் பெற்றுக் கொடுத்தாலும் மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் போன்ற நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நஷ்டம் காரணமாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதிய இலங்கை ரூபாய்கள் இல்லாமை பாரிய பிரச்சினையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் தற்போதைய பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மத்திய வங்கி, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் கொள்கைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 600 மில்லியன் அமெரிக்க டொலரை எதிர்காலத்தில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், முதல் சுற்றில் தொழில்நுட்பப் பிரிவின் பேச்சுவார்த்தைகளின் இறுதிநாள் இன்று (நேற்று) எனவும் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும்போது மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைமைக்கு அப்பால் நடைமுறைச்சாத்தியம் அற்ற வகையில் குறிப்பிடப்படுவதால் பாராளுமன்றம் பிழையாக வழிநடத்தப்படுவதாகவும் அமைச்சுக்கள் உள்ளிட்ட செலவீனங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுவது இறுதியில் செலவீனத்தை ஈடு செய்ய முடியாத அளவுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை ஏற்படுவதும், கடன் சுமைக்குள் சிக்குவதும் இந்த நிலைமைக்குக் காரணம் என்றார்.

# நீச்சல் தடாகமாகின பரீட்சை நிலையங்கள்

அதாவது, நீச்சல் தடாகம் போல காட்சியளித்தன. எனினும், பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபங்களுக்கு தங்களுடைய பஸ்களில் ஏற்றிவந்த இலங்கை இராணுவம், வெள்ளத்தில் இருந்து பரீட்சை மத்திய நிலையங்களுக்குச் செல்வதற்கு, கதிரைகளை பாலமாக போட்டது.

புத்தளம் மாவட்டத்தில் மட்டும் ஐந்துக்கும் மேற்பட்ட பரீட்சை மத்திய நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த பரீட்சைகள், தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக 9.45 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(மேலதிக படங்கள் P3)

# எரிபொருள் விநியோகம் வரையறுக்கப்பட்டது

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எரிசக்தி அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான காஞ்சன விஜேசேகர,

உலக சந்தையில் நிலவும் விலை மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் அமைச்சரவையில் அங்கிகரிக்கப்பட்ட விலை சூத்திரம் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், மோட்டார் சைக்கிள்களுக்கு 2,500 ரூபாய்க்கும் , ஓட்டோக்களுக்கு 3,000 ரூபாய்க்கும் சகல எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படும். அத்துடன், கார் மற்றும் வான் என்பவற்றுக்கு 10,000 ரூபாய்க்கும் எரிபொருள் விநியோகிக்கப்படும் என தெரிவித்த அவர், பஸ்கள் மற்றும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்கள் இந்த வரையறைக்குள் உள்வாங்கப்படாது என்றார்.

மேலும் அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்ட விலை சூத்திரம் எதிர்காலத்தில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த அமைச்சர், இச்சூத்திரமானது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது மாதாந்தம் அமுல்படுத்தப்படும் என்றார்.

நேற்று (24) அதிகாலை தொடக்கம் எரிபொருள் விலை திருத்தம் செய்யபட்டதென்றும் விலை சூத்திரத்துக்காக எரிபொருள் இறக்குமதி செலவுகள், தரையிறங்கும் செலவுகள், விநியோகச் செலவுகள் மற்றும் வரி என்பன தொடர்பில் ஆராயப்பட்டது என்றார். இந்த விலை சூத்திரத்திற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு, நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி, இலங்கை எரிபொருள் கூட்டுதாபனம், இலங்கை, இந்திய எரிபொருள் நிறுவனம், நுகர்வோர் அதிகார சபை, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பரிந்துரைகளை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# ராஜபக்ஷர்கள் மாலைத்தீவுக்கு...

மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது தமது குடும்பமோ நாட்டை விட்டு தப்பிச்செல்லும் எண்ணத்தில் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக மொஹமட் நஸீட் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், எனினும் இது தொடர்பில் அவருக்கு எந்தவிதமான முன் அனுபவங்களும் இல்லை எனவும், இதேவேளை ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாப்பாக மாலைத்தீவுக்கு அழைத்து செல்வது தொடர்பிலும் அவர் இலங்கையில் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும், இந்தியர் ஒருவருக்கு சொந்தமான மாலைத்தீவில் உள்ள சோனேவா ஃபுஷியில் உள்ள விடுதி ஒன்றை மஹிந்த சொந்தமாக வாங்கிக்கொள்ள வேண்டுமெனவும் அவர் ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும் மாலைத்தீவு ஊடகம் ஒன்று பகிரங்கமாக விமர்சித்துள்ளது.

இந்தியருக்கு சொந்தமான 12 மில்லியன் டொலர்கள் பெறுமதியான விடுதியை மஹிந்தவின் குடும்பத்துக்கு விற்பனை செய்ய அவர் இணங்கியுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த செய்தியை நாமல் ராஜபக்ஷ முற்றாக மறுத்துள்ளார். மக்களை கவர்வதற்காக இவ்வாறான செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டு வருவதாகவும், இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்கு செல்லும் எண்ணம் தனது தந்தைக்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை மாலைத்தீவில் விடுதி ஒன்றை கொள்வனவு செய்ய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கவில்லை என்றால் எதற்காக நாமல் ராஜபக்ஷ அவரது கடவுசீட்டின் பிரதியை வழங்கினார் எனவும் மாலைத்தீவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் டுவிட்டரில் கேள்வி எழுப்பியுள்ளார். இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவுடன் எந்தவிதமான தொடர்பும் தமக்கு இல்லை என சோனேவா ஃபுஷியில் உள்ள விடுதியின் உரிமையாளர் தெரிவித்துள்ளதோடு, மஹிந்த மற்றும் அவரது குடும்பத்தினருக்கு விடுதியை வழங்குவது தொடர்பில் எந்தவிதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# இரட்டை பிரஜாவுரிமை விவகாரம்;...

சரத்தை நீக்கவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மீண்டும் வலியுறுத்த ஆரம்பித்துள்ளதுடன், தற்போதுள்ள நெருக்கடி நிலையில் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அவசியம் இல்லை எனவும், மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்வது குறித்து முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். எனினும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷ இதனை கடுமையாக எதிர்த்துள்ளதுடன் இரட்டை பிரஜாவுரிமை கொண்ட நபர்கள் அரசியலில் ஈடுபடுவது தடுக்கப்படும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தப்படல் உள்ளிட்ட முக்கிய காரணிகளை உள்ளடக்கிய அரசியலமைப்பின் 21 ஆம் திருத்த சட்ட யோசனையை நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ, குறித்த யோசனை அறிக்கையை சகல கட்சிகளுக்கும் கையளிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். சகல அரசியல் கட்சிகளையும் சந்தித்து இது குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதுடன் அடுத்த வாரம் பாராளுமன்ற கூட்டத்தொடரில் 21ஆம் திருத்த சட்டமூலத்தை சபைப்படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்து கருத்துக்களை முன்வைத்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், தற்போதுள்ள நெருக்கடி நிலைமையில் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விடவும் மக்களுக்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுத்து, பொருளாதார மறுசீரமைப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும், இரட்டை பிரஜாவுரிமை விவகாரங்களை இப்போது கையாலாது காலப்போக்கில் அவசியமான மாற்றங்களை செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிரதான கட்சியின் நிலைப்பாடு இவ்வாறு இருக்கையில், இது குறித்து நீதி அமைச்சர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன் இரட்டை பிரஜாவுரிமை நபர்கள் அரசியலில் ஈடுபட முடியாது என்ற யோசனை எக்காரணம் கொண்டும் 21 ஆம் திருத்தத்தில் இருந்து நீக்கப்படாது எனவும், அதனை எவரும் எதிர்ப்பார்கள் என்றால் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தியேனும் இதனை உறுதிப்படுத்தி அவ்வாறான நபர்களை அரசியலில் இருந்து நீக்குவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு 2 மில். டொலர் தருகிறது WHO

இலங்கையின் மருத்துவ நெருக்கடியை சமாளிக்க பூரண ஆதரவை வழங்குவதாக உறுதியளித்த உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), இலங்கைக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலரை விரைவில் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் அலுவலகத்தில், நேற்று (24) சந்தித்த போதே இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி டொக்டர் அலகா சிங் உறுதியளித்தார். தற்போதைய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் இலங்கையில் உள்ள மருந்துப் பற்றாக்குறையை ஜூலை அல்லது ஒகஸ்ட் மாதத்துக்குள் தீர்க்க முடியும் எனத் தாம் நம்புவதாகவும் அலகா சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவைகளை மேம்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் உறுதிபூண்டுள்ளது என்று வலியுறுத்திய அவர், தமது உதவித் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் கீழ், 2 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை பெற்றுக்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் ஆதரவையும் இந்தியா, பங்களாதேஷ் உட்பட பல நாடுகளின் ஆதரவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது பாராட்டினார்.

## நீச்சல் தடாகமாகிய பரீட்சை நிலையங்கள்











ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணிக்காக

## மாலிக்கு புறப்பட்டது இலங்கை இராணுவம்



ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணிக்காக 243 பேர் உள்ளடக்கிய இராணுவ குழுவின், 100 பேரை உள்ளடக்கிய முதற்கட்ட குழுவினர் நேற்று முன்தினம் (23) மாலை மாலி நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

மாலி நாட்டிற்கு புறப்பட்ட இராணுவக் குழுவினரை வழியனுப்பி வைக்கும் முகமாக, பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு சென்று அக்குழுவினருடன் சில எண்ணங்களை பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

ஒருங்கமைக்கப்பட்ட குழுவே

## அமைதியின்மையை ஏற்படுத்துகிறது

■ மகேஸ்வரி விஜயனந்தன்



எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் வாகனங்கைளை திருப்பி அனுப்பி அமைதியின்மையை ஏற்படுத்தவும் ஒருங்கமைக்கப்பட்ட குழுவொன்று ஈடுபடுவதாக தெரிவித்த எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, அது தொடர்பான காணொளிகளை பொலிஸ்மா அதிபர் தன்னிடம் காண்பித்ததாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டில் அன்றாட எரிபொருள் விநியோகத்துக்கு தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்களே அதிகம் பங்களிப்பு செய்வதாகவும் தற்போது அவர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையால் எரிபொருள் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

எனினும் அரசாங்கத்தின் விலைகளுக்கு இணக்கத்தை தெரிவித்து விநியோக சேவையில் ஈடுபடும் எரிபொருள் கொள்கலன்களுக்கு தடையை ஏற்படுத்த வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தார். தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவர்களது உரிமை. ஆனால் அரசாங்கத்தின் விலைக்கு இணக்கத்தை தெரிவித்து, விநியோக சேவையில் ஈடுபடும் தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள், ஏனைய தொழிற்சங்கத்தினரால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

நேற்றைய தினம் எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்குரிய 86 வாகனங்கள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் 100 வாகனங்கள், தனியாரின் 20 வாகனங்கள் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டன. கடந்த 6 மாதங்களில் எரிபொருள் கூட்டுத்தாபனமானது தனியார் எரிபொருள் விநியோக பிரிவுகளுக்கு மாதம் 289 மில்லியனை செலவிட்டுள்ளதுடன் ஏப்ரல் மாதம் இது 4,889 இலட்சம் ரூபாயாக அதிகரித்தது. எனவே எதிர்வரும் 2 நாள்களுக்குள் சேவைக்கு சமூகமளிக்காத வாகனங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என்பதுடன், அந்த வாகனங்களில் பணிபுரிபவர்களின் அனுமதிபத்திரங்களையும் இரத்து செய்து சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

## மோசமான பின்னடைவை இலங்கை சந்திக்கும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

“இலங்கை வரலாற்றில் இதுவரையில் பதிவாகியிராத மிகவும் மோசமான பின்னடைவை இலங்கை பதிவு செய்யும் என நாம் எதிர்பார்க்கின்றோம்” என்று தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அடுத்த மூன்று முதல் ஆறு மாத காலப்பகுதிக்கு எம்மால் சாதாரண இறக்குமதிகளை மேற்கொள்ள முடியாது” என்றும் தெரிவித்தார்.

மேலும், “தொழிற்றுறைகள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு போதியளவு மூலப்பொருட்கள் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கின்றன” எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

‘தற்போதைய பொருளாதார சூழ்நிலை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள்’ எனும் தலைப்பில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “ரூபாயின் மதிப்பு முறையாகப் பேணப்படாமை, வட்டி வீதங்கள் இலக்குகளின்றி நிர்வகிக்கப்பட்டிருந்தமை, அதிகளவு நாணயம் அச்சிடல் போன்ற காரணிகளால் எழுந்த தாக்கங்களின் காரணமாக, பாரிய எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார துண்டிப்புகள் போன்றவற்றுக்கு இலங்கை தற்போது முகங்கொடுக்கிறது.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவல் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதற்கு முன்னர் 2001 ஆம் ஆண்டில் நாட்டில் யுத்தம் நிலவிய சூழலில், இந்த வளர்ச்சி 1.5 சதவீதமாக பதிவாகியிருந்தது.

இரண்டு வருட காலப்பகுதியில் இரண்டு ட்ரில்லியன் ரூபாய்க்கு அதிகமான தொகையை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டிருந்தமை காரணமாக, வட்டி வீதங்கள் சீராக பேணப்படாமையால் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி மதிப்பிழந்திருந்தது. தற்போது இந்த வட்டி வீதம் 20 முதல் 25 சதவீதமாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியல் நெருக்கடி, சமூக அமைதியற்ற நிலை போன்றன தோற்றுவிக்கப்பட்டுள்ளன” என்றும் ஆளுநர் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் 72 வருட கால வரலாற்றில், 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 200 இலிருந்து 380 ஆக வீழ்ச்சியடைந்திருந்தமை மிகவும் மோசமான நெருக்கடி நிலையாக அமைந்துள்ளதாகவும் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## நாட்டின் நெருக்கடியை தீர்க்கவே 21ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டது

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் அமைச்சரவையில் நேற்று முன்தினம் (23) முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் விரைவில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துவதுடன், தற்போதைய நெருக்கடியைத் தீர்த்து, புதிய மாற்றத்தை ஏற்படுத்த நீதி அமைச்சர் இத்திருத்த யோசனையை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சி தலைவர்களிடமும் இத்திருத்த யோசனையை உடனடியாக முன்வைத்து, அவர்களின் கருத்துகளை கோர அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இவ்வாறு கட்சித் தலைவர்களின் யோசனைகளைப் பெற்றவுடன், அடுத்தவாரமே அமைச்சரவையில் இத்திருத்த யோசனை தொடர்பில் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

## ரணிலுக்கு இரு தெரிவுகளே உள்ளன

■ பா.நிரோஸ்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒன்று பசில் உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் பேச்சைக் கேட்டு செயற்படுவது, அல்லது பிரதமர் பதவியிலிருந்து விலகுவது என இரு வழிகளே இருப்பதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், எந்தக் கட்சி அரசாங்கம் அமைத்தாலும் மஹிந்த அமரவீரவும், நிமல் சிறிபால டி சில்வாவும் அதில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்கிறார்கள். மஹிந்த, மைத்திரியின் அமைச்சரவையிலும் தற்போது ரணில் - கோட்டா அமைச்சரவையிலும் அவர்கள் அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ளனர் என்றார்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், முன்னாள் அமைச்சரான பசில் ராஜபக்ஷவின் விருப்பத்துக்கு ஏற்றவாறே ரணிலால் செயற்பட முடியும். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கைதிபோல ரணில் செயற்பட வேண்டிய நிலை ஏற்படும்.

நாட்டுக்காக அமைச்சுப் பதவியை பெறுவதாக கூறுபவர்களுக்கு, நாட்டுக்காக அமைச்சுப்பதவிகளை பெறாது சேவையாற்ற முடியாதா? நாட்டை நாசமாக்கிய அமைச்சர்களே மீண்டும் அமைச்சர்களாகியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நினைப்பதாகவும் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.



ஆஸி. செல்ல முற்பட்ட

# 67 பேர் கைதாகினர்





ஏ.எம். கீத், எப்.முபாரக்

அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 67 பேரை, திருகோணமலை கடற்பரப்பில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்று முன்தினம் (23) கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சாம்பல்தீவு, சல்லி கடற்கரைப் பகுதியில் வைத்து 12 பேர் மற்றும் சல்லி கடல் பகுதியில் படகில் சென்ற 55 பேர் என மொத்தமாக 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிறுவர்கள் மூவர் உட்பட ஆண்கள் 45, பெண்கள் 07 பேர் அடங்குவர். இவர்கள், 03 வயது தொடக்கம் 53 வயது வரையான நபர்கள் எனவும் திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி, கம்பஹா, அம்பாறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை, சல்லி, சாம்பல்தீவு கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்ட 12 பேர், நிலாவெளி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கடல் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட 55 பேர், திருகோணமலை துறைமுகப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள், திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இன்று (25) ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளி, திருகோணமலை துறைமுகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எண்மருக்கு அழைப்பாணை

பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகர பிரதேசங்களில் தொடர்ச்சியாக துர்நாற்றம் வீசுகின்றமை தொடர்பில் 8 பேருக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன்றால் நேற்று முன்தினம் (23) அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

துர்நாற்றம் வீசுவதற்கான காரணங்களை இதுவரை கண்டறிந்து, எந்த நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பிலேயே இவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.எல்.எம். நியாஸ், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.கே.எம் அர்சத் காரியப்பர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் முஹம்மத் அஸ்மி ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கல்முனை மாநகர சபை விலங்கு வைத்தியர் வெட்டபொல, கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி. அன்சார், அம்பாறை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் குறித்த விடயம் தொடர்பில் சில செய்திகளை எழுதிய பிராந்திய ஊடகவியலாளர் ஆகியோருக்கும் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி 8 பேரையும் ஜூன் 6ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

முறைப்பாட்டாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆரிப் சம்சுதீன், எம்.எஸ்.ரஸாக், சட்டத்தரணிகளான ஜாவீட் ஜெமீல், அனோஜ் பிர்தௌஸ், அப்துல் கரீம் அஹமட் றிப்கான் ஆகியோர் மன்றில் ஆஜராகினர்.

## ‘ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்’ கட்டுரைத் தொகுப்பு

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பில் வைத்து 2004ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த தினம், எதிர்வரும் 31ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ளது.

அதனை முன்னிட்டு, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் ஞாபகார்த்த நிகழ்வும் ‘ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்’ கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில், மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணியளவில் இந்நகழ்வுகள் நடைபெறவுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள ‘ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்’ கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உப தலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இ.பாக்கியராஜா நிகழ்த்தவுள்ளதுடன், நூல் வெளியீட்டுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வுக்கு அனைத்து ஊடகவியலாளர்களையும் சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் கலந்துகொள்ளுமாறு, ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

விவசாய

## மாதிரிக் கிராமம் அங்குரார்ப்பணம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன், ஜவ்பர்கான்



மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில், பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழ் வரும் கண்ணபுரம் கிராமத்தை விவசாய மாதிரிக் கிராமமாக செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்காக கிழக்கு மாகாண ஆளுநரின் நிதியொதுக்கீட்டின் கீழ், விவசாய உபகரணங்கள் மற்றும் விவசாய உள்ளீட்டு பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பசுமை விவசாயத்தின் மூலம், சிறந்த ஆரோக்கியமான உணவு உற்பத்திகளை அறுவடை செய்யவும் சேதன பசளை பாவனை மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மாவட்டச் செயலாளர் க.கருணாகரன் கலந்துகொண்டார். அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் ஹரிகரன், பிரதி விவசாய பணிப்பாளர் பேரின்பராசா, போரதீவுப்பற்று உதவி பிரதேச செயலாளர் துலாஜனன், விவசாய போதனா ஆசிரியர் கோபி, விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்பின் உறுப்பினர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பஞ்சம் ஏற்படாத வகையில் உணவுப் பொருட்களை

# களஞ்சியப்படுத்த துரித நடவடிக்கை

மரவள்ளியை நட ஏற்பாடு



எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து, அத்தியாவசிய பொருட்களை களஞ்சியப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 3 மாதங்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில், மாவட்டத்தைப் பாதுகாக்கும் வகையில், மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (24) விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திணைக்கள தலைவர்கள், வர்த்தக சங்கம், ஏனைய தொடர்புடைய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலை அடுத்து கருத்துரைத்த மாவட்ட அரசாங்க அதிபர், கலந்துரையாடலின் போது பல்வேறு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. மாவட்டத்தில் கோதுமை மா தட்டுப்பாடு ஏற்படும் கால கட்டத்தில், அதற்குப் பதிலாக அரிசி மாவைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

“மேலும், மூன்று மாத காலத்தில் அறுவடை செய்யக்கூடிய மரவள்ளியை நட்டு, மூன்று மாதத்தின் பின்னர் அதன் விளைச்சலை மக்கள் பயனடையக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

“வர்த்தக நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

“பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டதோடு, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்போடு, பால் உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

“மன்னார் மாவட்டத்தில் அரிசிக்கு பாரிய அளவில் தட்டுப்பாடு ஏற்படாது என்ற காரணத்தால், நெல்லை களஞ்சியப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

“மேலும், சமுர்த்தி ஊடாக வழங்கப்பட்ட விதைகள், ஒரு குடும்பத்துக்கு 40 வீதம், 17 ஆயிரம் குடும்பங்களுக்கு பயன் தரும் கன்றுகள் ஏற்கெனவே வழங்கப்பட்டன. அதனூடான உற்பத்தியை பெற்று மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

“மேலும், 10 ஆயிரம் முருங்கை மரக் கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அதன் பயன்பாட்டையும் உறுதிபடுத்த அறிவுறுத்தி உள்ளோம்.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடி உள்ளோம். குறிப்பாக கடல் உணவுகளை கருவாடாக பதப்படுத்தி வைக்கவும் ஆலோசனை வழங்கி உள்ளோம்” என்றார்.

எரிபொருள் விநியோகத்தின் போது

## பரமேஸ்வர சந்தியில் குழப்பம்

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பரமேஸ்வர சந்திப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிவாயு விநியோகத்தில் நேற்று (24) குழப்பம் ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கொண்டுவரப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் தமக்கு உரிய முறையில் விநியோகிக்கப்படவில்லை என எரிவாயுவை பெற அங்கு காத்திருந்த மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

பலாலி வீதியை மறித்து மக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இரவு பரமேஸ்வரா சந்தி எரிவாயு விநியோகஸ்தரிடம் எரிவாயு வந்திறங்கியதாக பொதுமக்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து, நேற்று அதிகாலை முதல் அங்கு மக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில், எரிவாயு விநியோகஸ்தர் எரிவாயு இல்லை எனத் தெரிவித்த போது, பொதுமக்கள் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர். அத்தோடு வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், அங்கு கூடியிருந்த பொதுமக்களை, விநியோக நிலையத்துக்குள் அழைத்துச் சென்று அங்கு ஏதாவது எரிவாயு கொள்கலன் இருக்கின்றதா என பரிசோதித்த பின்னர் நிலைமை சுமூகமானது.





## திருட்டு குற்றத்தில் யாழில் ஒருவர் கைது


எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வருட காலத்தில் 6 வீடுகளில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை, பூம்புகார் பகுதியை சேர்ந்த 36 வயது நபரே, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால், நேற்று முன்தினம் (23) கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்படி நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது, 2021ஆம் ஆண்டு மற்றும் 2022ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 6 வீடுகளில் தங்க நகைகள், பணம் ஆகியனவற்றைத் தான் திருடியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருதொகை நகை மற்றும் பணம் ஆகியன மீட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்திய நிவாரண பொதிகளில்

## யாழ்ப்பாணத்துக்கு 75 ஆயிரம் ஒதுக்கீடு

செ.கீதாஞ்சன்

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண பொருட்கள், இலங்கையில் வறுமையில் வாடும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட அரசாங்க அதிபர்களை இணையவழியில் சந்திப்பு நடத்திய உயர் அதிகாரிகள், மாவட்டத்தில் வறுமையில் உள்ள மக்களின் புள்ளிவிவரங்கள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டுள்ளதுடன், மாவட்டத்துக்கான உலர் உணவு பொதிகளின் எண்ணிக்கை, பால்மா பக்கெட்டுக்களின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானித்துள்ளார்கள்.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கென 75 ஆயிரத்து 343 பொதிகளும் 18, 836 பால்மா பக்கெட்டுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஹட்டனில்
# சமையல் எரிவாயு மா:.பியா அதிகரிப்பு
## சாதாரண மக்கள் பாதிப்பு

மலைவாஞ்ஞன்

ஹட்டன் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, அவற்றை பதுக்கி கறுப்புச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஹோட்டல் உரிமையாளர்கள் தங்களிடம் பணிபுரியும் ஊழியர்களையும் தரகர்களையும் பயன்படுத்தி, பத்து அல்லது பதினைந்து சமையல் எரிவாயு சிலின்டர்களைப் பெற்று, கூடிய விலைக்கு விற்பனை செய்துவருகிறார்கள்.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 8,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் சாதாரண மக்கள் தமக்குத் தேவையான எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது குறித்து அரசாங்கம் கவனமெடுத்து, ஒரு குடும்பத்துக்கு ஒரு எரிவாயு பெற்றுக்கொள்ளும் வகையில் கிராம சேவகர் ஊடாகவோ அல்லது அரச பொறிமுறைக்கு அமையவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.



கொங்கோடியா தோட்டத்தில்
# போதைப்பொருளுடன் இளைஞன் கைது

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொங்கோடியா கீழ் பிரிவு தோட்டத்தில் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த இளைஞன் ஒருவர், இராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இளைஞன், வலப்பனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளதாகவும், அண்மையில் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கான வேலைவாய்ப்பில், வலப்பனை பிரதேச செயலகத்தில் கடமையாற்ற உள்வாங்கப்பட்டவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சந்தேகநபர், போதைப்பொருள் விற்பனையில் நீண்ட நாள்களாக ஈடுபட்டு வந்ததாகவும் இவர் தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் (23) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது இவரிடமிருந்து ஆறு பக்கெட் போதைக்பொருளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடும் பாதுகாப்புக்கு மத்தியில்
# காஸ் விநியோகம்

ரஞ்சித் ராஜபக்ஷ

லிட்ரோ நிறுவனத்தால் ஹட்டன் மற்றும் பொகவந்தலாவை நகரில் நேற்று (24) சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதுடன், பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நுகர்வோருக்கு சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

இதற்கமைய, ஹட்டன் நகருக்கு 400 சிலிண்டர்களும் பொகவந்தலாவை நகருக்கு 350 சிலிண்டர்களும் லிட்ரோ நிறுவனத்தால் அனுப்பி வைக்கப்பட்டன.

எனினும், நுகர்வோரின் கேள்விக்கு அமைய லிட்ரோ நிறுவனத்தால் சமையல் எரிவாயு அனுப்பி வைக்கப்படவில்லை என, விற்பனை முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சில ஹோட்டல்களின் உரிமையாளர்கள், தரகர்களைப் பயன்படுத்தி தேவையற்ற விதத்தில் சமையல் எரிவாயுவை சேகரிப்பதாகவும் இதனால் சாதாரண நுகர்வோருக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, சமையல் எரிவாயு விநியோகத்தின் போது, நுகர்வோருக்கும் விநியோகஸ்தர்களுக்குமிடையில் பொகவந்தலாவை நகரில் அமைதியின்மை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கட்சியின் பின்னால் சென்றதால்
# அரசியல் கவிழ்ந்தது
## வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு

கட்சியை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட அரசியல் பயணத்தால், அரசியல் கவிழ்ந்தது எனத் தெரிவித்துள்ள கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நாட்டின் இன்றைய நிலைமைக்கு இதுவே பிரதான காரணமாக அமைந்திருந்தது என்றார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

“எமது நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகளின் தோல்வி, இன்று மொத்தமாக வெளிப்படுகின்றது. இலங்கையின் அரசியலில் பெரும்பான்மை சார்ந்த தேசிய கட்சிகள், பிரதான இடம் வகித்து வந்துள்ளன. அதேபோன்று, இனங்கள் சார்ந்ததாகவும் பிராந்தியங்கள் சார்ந்ததாகவும், சிறுபான்மை கட்சிகள் உருவாகி இருக்கின்றன. அதற்கு மேலதிகமாக, பல சிறு கட்சிகளின் செயற்பாடுகளும் இருக்கின்றன. நாட்டின் இன்றைய நிலைமைக்கு, கட்சியை முன்னிலைப்படுத்திய அரசியலின் தோல்வியே காரணமாகும்.

“நாட்டுக்கென தேசிய கொள்கை திட்டம் ஒன்றை வகுத்து, அதற்கமைய தூர நோக்கத்துடன் எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாட்டுக்கென தேசிய கொள்கை ஒன்று இருக்கின்றதா எனக் கேட்டால், இல்லை என்பதே உண்மையாகும். மாறாக, அரசியல் கட்சிகள், தமக்கென கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றையே முன்னிலைப்படுத்தி செயற்பட்டனர்.

“காலத்துக்கு காலம் ஆட்சி மாற்றம் இடம்பெறுகின்றபோது, கொள்கையும் செயற்பாடுகளும் மாற்றமடைந்தன. அது மட்டுமல்லாது, ஆட்சியமைப்பதற்காக கூட்டுச்சேரும் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்பவும், விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவும், கொள்கைகள், செயற்பாடுகள் மாற்றம் அடைந்தன.

இவையனைத்தும் எமது நாட்டுக்கென நிலையான ஒரு கொள்கை, வேலை திட்டம் இருக்கவில்லை என்பதையே மீண்டும் எடுத்துக்காட்டுகின்றன.

“கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்தி தெரிவாகும் உறுப்பினர்களுக்கு, நாட்டையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி செயற்படுவதற்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை. இன்று, நாடு மீள முடியாத பிரச்சினைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறான சூழலிலும், கட்சி அரசியலை முன்னிலைப்படுத்துவதே பிரதானமாக நடைபெறுகின்றது.

“கட்சித் தலைவர்களிடையில் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது, தமது கட்சியின் பெரும்பானமையை தக்கவைத்துக்கொள்வது என இந்நிலைமை தொடருகின்றது. இந்நிலைமை மாறி, மக்கள் பிரதிநிதிகள் மக்களையும் நாட்டையும் முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய காலகட்டம் உருவாகி இருக்கின்றது.

“கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று செயற்பட்டால் மட்டுமே, இன்று நாம் விழுந்திருக்கும் அதலபாதாளத்திலிருந்து மீள எழ முடியும்” என்றார்.



# கடலையுடன் நகர்ந்தது எரிபொருள் வரிசை

மஹேஸ் கீர்த்திரத்ன

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக பல மணி நேரமாக காத்திருப்பவர்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கும் மனிதாபிமான நடவடிக்கைகள் நாட்டில் ஆங்காங்கே நடைபெறுகின்றன

அந்த வகையில், மாத்தளையில் பல மணி நேரமாக எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்தவர்களுக்கு உண்பதற்கு அவித்த கடலை நேற்று முன்தினம் (23) வழங்கப்பட்டுள்ளது.

மாத்தளை, மெலதம்பொத சிறி நிகென்தராட



விஹாரையின் பிக்குகளால் அவித்த கடலை வழங்கப்பட்டது.

விஹாராதிபதி மொரட்டுவ வினித தேரேரின் ஆலோசனைக்கமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# சிறுத்தையின் உடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ



தலவாக்கலை, ட்ருப் தோட்டத்தில் சிறுத்தையின் உடலமொன்று, நேற்று (24) காலை மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை பறிப்பதற்காக சென்ற சிலர், இது தொடர்பில் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்துள்ளனர்.

பின்னர், தோட்ட முகாமையாளரால், நுவரெலியா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, ட்ருப் தோட்டத்தில் கடந்த சில நாள்களாக வளர்ப்பு நாய்கள் பல காணாமல் போயிருந்ததுடன், காணாமல் போன நாய்களின் தலைகள் மாத்திரம் தோட்டத்தின் பல இடங்களில் காணப்பட்டதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி மாவட்டத்தில்
# உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை வெற்றி

நதீக தயாபண்டார

கண்டி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியை அறிமுகப்படுத்தும் புதிய வேலைத்திட்டமொன்று, மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டு, அது தற்போது வெற்றியளித்துள்ளது என மத்திய மாகாண விவசாய பணிப்பாளர் ரணதுங்க பண்டார தெரிவித்தார்.

நுவரெலியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த உருளைக்கிழங்கு செய்கையை, கண்டி மாவட்டத்தில் அறிமுகப்படுத்தி உள்ளதுடன், பல படிமுறைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் கீழ் கண்டி மாவட்டத்தின் உடிஸ்பத்துவ, ரங்கல, தங்கப்புவ ஆகிய பிரதேசங்களில் இச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு, முதலாவது அறுவடையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

முன்னர் தேயிலை செய்கை பண்ணப்பட்ட இடங்களிலேயே, குறித்த கிழங்கு செய்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் மண், வானிலை என்பவனவும் இதற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது என்றார்.



# வாழ்வதற்கு மக்கள் அச்சம்


மலைவாஞ்ஞன்

வாழ்வதற்கு இன்று மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அந்தளவுக்கு வாழ்வதற்கான பெரிய சவால் ஏற்பட்டு விட்டதாக, பிரிடோ நிறுவனத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.கே.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மலையகப் பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்த தாய்மார்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று, அக்கரப்பத்தனை- மன்றாசி பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “எங்களுடைய தாய்மார்கள்



வெளிநாட்டில் உழைத்து அனுப்பும் அந்த டொலரை வைத்துக்கொண்டு, இங்கே பாராளுமன்றத்தையும் ஏனைய களியாட்ட விழாக்களையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

“நாங்கள் ராஜபக்ஷ குடும்பத்தின் உறவை அறுத்துக்கொள்வோம் என்று சொன்னவர்கள், இன்று அவர்கள் மடியிலே படுத்துக்கொண்டிருக்கிறார்கள்.


ஏன் இதைப்பற்றி யாராவது கேள்வி கேட்டிருப்பார்களா? அந்த அளவுக்கு வெளியில் இருப்பவர்கள் மடையர்கள் என்று யோசித்ததால் தான் அவர்களுக்கு வேண்டிய மாதிரி கதைகளையும் கருத்துகளையும் சொல்லிக்கொண்டு போகின்றார்கள்.

“அவர்களுக்கு தெரியும்; யாரும் பேசமாட்டார்கள்; நாங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று ஏனென்றால், எம்மை முட்டாள்களாக கருதிக்கொண்டு இருக்கிறார்கள்.

“இன்று ஒரு கற்பனை உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆகவே, இந்த இளைஞர்கள் மாறவேண்டும்” என்றார்.

கூலித் தொழிலாளியை
# நிர்வாணமாக்கி தாக்கிய ஐவருக்கும் விளக்கமறியல்

காமினி பண்டார



மஸ்கெலியா நகரில் கூலித் தொழிலில் ஈடுபடும் நபரொருவரின், ஆடைகளைக் களைந்து, நிர்வாணமாக்கித் தாக்கியவர்களை இன்று (25) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, ஹட்டன் மாவட்ட நீதவான் பரீட்டீன் உத்தரவிட்டார்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவர், மஸ்கெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களுள் நால்வரை இன்று வரை (25) விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஐவரில் ஒரு சந்தேகநபர் நோயால் பீடிக்கப்பட்டுள்ளார் என அவரது மனைவியால் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் காரணங்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து, அவரை 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு, நீதவான் உத்தரவிட்டார்.

தாக்குதலுக்கு இலக்கான மஸ்கெலியா, சோளாங்கந்த தோட்டத்தைச் சேர்ந்த நபர், மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மஸ்கெலியா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வரும் சந்தேகநபர்கள், அவர்களின் வர்த்தக நிலையத்தில் கோதுமை மா இன்மையால், வேறொரு கடையிலிருந்து மா மூடை ஒன்றை கொள்வனவு செய்து வருமாறு தெரிவித்து, 5,720 ரூபாயை கூலித் தொழிலாளியிடம் இந்த மாதம் 14ஆம் திகதி வழங்கியுள்ளனர்.

எனினும், அந்தப் பணம் காணாமல் போனதாகவும் இதனால் சில நாள்களாக அக்கூலித் தொழிலாளி அந்த வர்த்தக நிலையத்துக்கு செல்வதைத் தவிர்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த வாரம் அந்த கூலித் தொழிலாளி மஸ்கெலியா நகருக்கு வருகை தந்த போது, வர்த்தக நிலைய உரிமையாளரும் மேலும் சிலரும் அந்த நபரை, கடைக்குள் இழுத்துச் சென்று, ஆடைகளை களைந்து கடுமையாகத் தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்கானவர், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில், இவ்வாறு தாக்கப்பட்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானதால் சந்தேகநபர்கள் உடனடியாக மஸ்கெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின்
# மனிதாபிமான உதவிகளுக்கு நன்றி

மொஹொமட் ஆஸிக்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால், இலங்கை மக்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மனிதாபிமான உதவிகள் குறித்து, அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை மற்றும் அப்துல்கலாம் மனித உரிமைகள் நலன்புரி அமைப்பு என்பவற்றின் இலங்கை கிளைத் தலைவர் என். கருணாகரன் நன்றி தெரிவித்துள்ளார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் மக்களுக்கு, அண்டைய நாடான இந்தியாவின் உதவி என்பது மிகப் பெறுமதியானது. அதிலும் மலையக மக்களின் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறப்படும் தமிழ் நாட்டின் உதவி பெரிதும் பாராட்டத்தக்கது.

9,000 மெட்றிக் தொன் அரிசி, 50 மெட்றிக் தொன் பால்மா, 25 மெட்றிக் தொன் மருந்துப் பொருட்கள் என்பன சாதாரண விடயமல்ல. எனவே, மலையக மக்கள் சார்பாக எமது அமைப்பின் நன்றியை தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான, நன்றி தெரிவிக்கும் கடிதம் ஒன்று, இந்தியத் தூதரகத்தின் ஊடாக விரைவில் அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கண்விழிக்கும் முன்பே அடிவயிற்றில் தீ மூட்டிய எரிபொருட்கள்

ஊர்களில் ஒருவர் ஆத்திரமடையும் போது, "அடிவயிற்றில் எட்டி உதைத்தால், குடல் குந்தானியெல்லாம் வெளியே வந்துவிடும்" எனச் சொல்வதை கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், அப்படியொன்று நடந்ததை கண்டிருக்கமாட்டோம். ஆனால், எட்டி உதைக்காமலே அது நடந்துவிடுமோ என்ற அச்சம் ஒவ்வொரிடத்திலும் சூல்கொண்டுவிட்டது.

பொருட்களின் விலை அதிகரிப்புடன் நித்திரைக்குச் சென்று, உருண்டு, பிரண்டு தூக்கமில்லாமல் படுக்கையை விட்டெழுந்த காலம் மலையேற, நாளைக்கு என்ன நடக்குமென நித்திரைக்குச் சென்று கண்விழிக்கும் முன்னரே, எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்க, ஏனைய பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் கிடுகிடுவென அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பை முன்னரே விடுத்திருந்தால், பதுக்கல் அதிகரித்திருக்கும். பழைய விலைகளில் கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்து கொண்டிருப்பர். ஆகையால்தான், வரிசையிலே நின்றிருந்து, களைத்து கண்ணயர்ந்த வேளையில், எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

எனினும், எரிபொருளுக்கான வரிசை இன்னுமின்னும் நீண்டு கொண்டே செல்கின்றது. அதற்குப் பின்னர், லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்தன. ஓட மறுத்த தனியார் பஸ்களின் கட்டணங்கள் 19.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஓட்டோ கட்டணம் 100 ரூபாயில் இருந்து ஆரம்பித்து, இரண்டாவது கிலோ மீற்றர் 90 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உணவுப்பொதிகள், சிற்றுண்டிகள், இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். கடந்த ஆறு மாதங்களில் ஒரு லீற்றர் டீசலின் விலை நூற்றுக்கு 230 சதவீதத்தாலும், பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை நூற்றுக்கு 137 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை அறிந்ததே.

ஆக, கடந்த ஆறு மாதங்களில் வாழ்க்கைச் சுமை கிடுகிடுவென அதிகரிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளன. மேலதிக வருமானத்தை பெறுவதில் சிரமம்; சாப்பாட்டு வேளைகளை குறைத்துக் கொண்டோரின் எண்ணிக்கை அதிகரிப்பு.

எரிபொருட்களின் தட்டுப்பாட்டால் சிசுவும் சிறுவனும் மரணித்த சம்பவத்தின் வேதனை தணியும் முன்னரே, எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டமை, பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கு 2,500 ரூபாய்க்கும், ஓட்டோக்களுக்கு 3,000 ரூபாய்க்கும் சகல எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படுமென வரையறை செய்யப்பட்டுள்ளது. எனினும், அதற்கு குறைந்த தொகைக்கே எரிபொருளை நிரப்பி, வாழ்க்கையை கொண்டுநடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

குறுகிய தூரங்களுக்குப் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவோர், இரண்டொரு பஸ் தரிப்பிடங்களுக்கு முன்பாக இறங்கிக்கொள்கின்றனர். இன்றேல், ஓரிரு தரிப்பிடங்களைக் கடந்து சென்று ஏறிக்கொள்கின்றனர். இது, தூர இடங்களுக்கான போக்குவரத்தில் சாத்தியப்படாது.

எரிபொருட்களின் விலைகளே, மக்களின் மீதான சுமைகளைத் தீர்மானிக்கின்றன. வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டிருக்கும் மக்களால், இனிமேலும் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகையால், குறுகிய காலத்துக்குள், எரிபொருட்களின் விலைகளை குறைத்து, மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சாலையில் சுற்றித்திரியும் சிறுவர்கள் பற்றி, எவரும் கண்டுகொள்வதில்லை. வறுமையின் பிடியில் வாழும், இந்த இளம்பராய பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி, இந்தச் சமூகம் கண்மூடியபடி இருக்கிறது.

இரக்கப்பட்டால் போதுமா? செயற்பாடும் அவசியம்தான்! சமூக நல அமைப்புகள் கூட்டாக, தக்க நடவடிக்கை எடுக்கலாம். இவர்கள் தேவையற்ற விடயங்களில் பரபரப்பாக இயங்குகின்றார்கள்.

ஆதரவற்ற இளம் சிறார்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி, பாதுகாப்பு என்பன மிக முக்கியம்.

"இந்த உலகில் யாவருமே ஒன்று" என மேடையில் பிரசங்கம் செய்கின்றவர்கள், தனவந்தர்கள் எல்லோரும், இந்த விடயங்களை நோக்கி, நல்ல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இரங்குவது மானிட சுபாவம். ஆனால், ஏழ்மையை எப்படி நீக்க உதவுவது என்று தெரியாதவர்களின் விழிகள் திறக்கப்பட வேண்டும். ஆதரவற்ற ஒரு பிள்ளையை எடுத்து வளர்த்தாலே, மேலான விடை கிடைக்கும். உதவிக்கரம் நீட்டுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கோட்டா - ரணில் கூட்டு தாக்குப் பிடிக்குமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் பார்வையில், தமது நலன்களைப் பாதுகாக்கக்கூடிய மிகவும் பொருத்தமானவரையே அவர், பிரதமராக நியமித்துள்ளார். ஏனெனில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் மேடைகளில் ராஜபக்‌ஷர்களை விமர்சித்தாலும் அவர், ராஜபக்‌ஷர்களுக்கு மிகவும் விசுவாசமானவர்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்‌ஷ தோல்வியடைந்து, தமது பாதுகாப்பைப் பற்றி அச்சமடைந்து இருந்தபோது, மறுநாள் அதிகாலை அலரி மாளிகைக்குச் சென்று, அவரது பாதுகாப்பை உறுதி செய்து, ஹெலிகொப்டர் மூலம் அவரை ஹம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தவர் ரணிலாவார்.

ராஜபக்‌ஷர்கள் உள்ளிட்ட மஹிந்த அரசாங்கத்தின் தலைவர்களின் ஊழல்களை விசாரித்து, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதே, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரியும் ரணிலும், மக்களுக்கு அளித்த பிரதான வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

போருக்குப் பின்னர், சர்வதேசக் கடலில் வெளிநாட்டு கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் தொழிலை, கடற்படை செய்து வந்திருந்தது. இதை, அப்படையிடமிருந்து பறித்து, 'அவன்ட்காட்' தனியார் நிறுவனத்துக்கு வழங்கியமை, ராஜபக்‌ஷர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட ஒரு பிரதான குற்றச்சாட்டாகும்.

அவ்வாறு இருக்க, அன்று புதிய அரசாங்கத்தை பொறுப்பேற்ற பிரதமர் ரணில், குற்றங்களைத் தடுக்கும் பிரதான இரண்டு அமைச்சுகளான சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களாக, 'அவன்ட்காட்' நிறுவனத்தின் முன்னாள் சட்டத்தரணிகளான திலக் மாரப்பன, விஜேதாஸ ராஜபக்‌ஷ ஆகியோரை நியமித்தார். அமெரிக்காவில் 'டிஸ்னிலான்ட்'டுக்கு, 'அவன்ட்காட்' நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியுடன், விஜேதாஸ குடும்பத்தினர் உல்லாசப் பயணமும் சென்றிருந்தனர். இதன் காரணமாகவே, மஹிந்தவின் காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் தொடர்பான விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு எதிராகவும் 'அவன்ட்காட்' விவகாரம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அப்போது, "கோட்டாபயவை கைது செய்ய, ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை" என, விஜேதாஸ பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

நீதி அமைச்சர் ஒருவர், ஒருவரை கைது செய்யவோ அல்லது, கைது செய்வதை தடுக்கவோ எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும்? இன்றும் கோட்டாபயவினதும் ரணிலினதும் அரசாங்கத்தில், நீதி அமைச்சராக விஜேதாஸவே கடமையாற்றுகிறார்.

இப்போதும் ராஜபக்‌ஷர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றை விசாரித்து, அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என காலிமுகத்திடலில் (கோட்டா கோ கம) ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் இளைஞர்கள் கூறி வருகின்றனர். 'கோட்டா கோ கம'வை பாதுகாப்பதாக உறுதியளிக்கும் ரணில், அவ்வாறான விசாரணைகளை நடத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்பது திண்ணமாகும்.

இவற்றுக்குப் புறம்பாக ரணிலுக்கு, நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி நல்ல அறிவு இருக்கிறது. சிறந்த ஆங்கில அறிவும் இருக்கிறது. வெளிநாட்டுத் தலைவர்களை அணுகும் திறமையும் இருக்கிறது. எனவே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் ரணில் மீது, ஜனாதிபதி நம்பிக்கை வைக்க முடியும்.

ரணில், தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து, நாட்டில் சுபீட்சத்தைக் கொண்டு வருவார் என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால், பொருளாதார விடயங்களைப் பற்றி ஆழ்ந்த அறிவில்லாத ஜனாதிபதிக்கு, ரணில் மீது நம்பிக்கை ஏற்பட்டு இருக்கும். எனவே, ஜனாதிபதியின் பார்வையில் ரணிலே தற்போதைய நிலையில் சிறந்த பிரதமராவார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கவும் தாம் விரும்பும் சட்ட திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மீதே, ரணில் தங்கியிருக்க நேர்ந்துள்ளது. அதாவது அவர், பொதுஜன பெரமுனவினதும் ஜனாதிபதியினதும் பணயக் கைதியாகவே உள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சி, பெரும்பாலும் ஜனாதிபதியின் இளைய சகோதரரான பசில் ராஜபக்‌ஷவின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவே கூறப்படுகிறது. அதாவது ரணில், பசிலினதும் பணயக் கைதியாகவே இருக்கிறார்.

கடந்த வாரம், பிரதி சபாநாயகர் தெரிவின் போது, அப்பதவி ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும் என பிரதமர் ரணில் கூறியிருந்தார். எனினும், பொதுஜன பெரமுன உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளரான ரோஹிணி கவிரத்னவுக்கு வாக்களிக்காமல், தமது கட்சியைச் சேர்ந்த அஜித் ராஜபக்‌ஷவுக்கே வாக்களித்தற்கான காரணம், பசில் என்றே கூறப்படுகிறது. அதாவது, ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவும் தம்மால் முடியாதவற்றை மட்டும் ரணிலைக் கொண்டு செய்தவாறு, அவரைத் தமது கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்துக் கொள்வர்.

'கோட்டா கோ கம' மீது தாக்குதல் நடத்துவதற்கு, அப்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்‌ஷவே, ஆயிரக்கணக்கான தமது ஆதரவாளர்களை அலரி மாளிகைக்கு அழைத்து வந்தார் என்பது, இப்போது சகலரும் அறிந்த உண்மையாகும். ஆனால், அன்று அலரி மாளிகைக்கு வந்திருந்த பொதுஜன பெரமுனவின் ஏனைய தலைவர்களுக்கு எதிராக, இரகசியப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். ஆனால், மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு எதிராக எந்தவொரு விசாரணையும் இல்லை. பிரதமராக இருந்தும் ரணில், அது தொடர்பாக எதையும் செய்வதில்லை; அதுதான் விசுவாசம்!

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து, அமைச்சர் விஜேதாஸ தயாரித்த அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்ட வரைவை, அமைச்சரவையில் சமர்ப்பித்து, அரசியல் கட்சிகளாலும் ஆராய்ந்து, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக பிரதமர் ரணில், திங்கட்கிழமை (23) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அந்தச் சட்டவரைவில், வெளிநாட்டு அல்லது இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள், தேர்தல்களில் போட்டியிடவோ வேறு வழிகளில் மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்படவோ முடியாது எனக் குறிப்பிடப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது. இது 19ஆவது திருத்தத்திலும் இருந்த சட்டப் பிரமாணமாகும்.

அமெரிக்கப் பிரஜையான பொதுஜன பெரமுனவின் அமைப்புச் செயலாளர் பசில் ராஜபக்‌ஷ, இதனால் பாதிக்கப்படப் போகிறார். பசில் விரும்பாத ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள, பிரதமர் ரணிலால் முடியுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பசிலுக்கு ஆதரவாக ஜனாதிபதி இருந்தால் அல்லது, பசில் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்தால், பிரதமர் ரணிலால் எதையும் செய்ய முடியாது. ரணில், ராஜபக்‌ஷர்களுக்கு விசுவாசமாக இருக்கலாம்; அதேவேளை, பணயக் கைதியாகவும் இருக்க வேண்டி இருக்கிறது.

ரணில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல என்பதற்குப் புறம்பாக, ரணிலை பிரதமராக, கோட்டாபய நியமிக்க மற்றொரு காரணமும் இருந்தது. மஹிந்த இராஜினாமாச் செய்ததன் பின்னர், புதிய பிரதமர் ஒருவரை, ஜனாதிபதி தேடிக் கொண்டு இருந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய மக்கள் சக்தியும், கோட்டாபய பதவி விலகினால் மட்டுமே தாம் அரச பொறுப்பை ஏற்பதாகக் கூறின. சஜித், பின்னர் அந்த நிபந்தனையை சற்று தளர்த்தினார்.

கோட்டாபய பதவி விலக வேண்டும் என்று ரணில் உறுதியாக ஒருபோதும் கூறவில்லை. எனவே, ரணிலை பிரதமராக நியமிப்பதால், தமக்குத் தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் இருக்க முடியும் என்று கோட்டாபய நினைத்திருக்கலாம்.

இவ்வாறு, தமக்குப் பாதுகாப்பான ஒருவரை பிரதமராக நியமித்து, ஆறு மாத காலத்தை எவ்வாறோ கடத்தினால், அத்தோடு அரச எதிர்ப்பு போராட்டங்களைப் பற்றிய மக்களின் கவனம் குறையும் வண்ணம், அவற்றை குழப்பாமல் இருந்தால், அப்போராட்டங்கள் பிசுபிசுத்துப் போகும் என ஜனாதிபதி கோட்டாபய கணக்குப் போட்டிருக்கலாம்.

உண்மையிலேயே, போராட்டங்கள் வன்செயல்களாக மாறவிடாமல் பார்த்துக் கொண்டால், அவை மக்களுக்கு சர்வ சாதாரணமாகிவிடும். அத்தோடு, ஆறு மாதங்களில் பல நாடுகளின் உதவிகளும் இலங்கைக்கு கிடைக்கலாம்.

அரசாங்கத்தின் இந்தக் கணக்குப் பிழைப்பதற்கு, வாய்ப்பை உருவாக்கும் ஒரு முக்கிய காரணி இருக்கிறது. அதாவது, நாளாந்தம் நாட்டின் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை உக்கிரமடைவதேயாகும். நேற்றும் (24) எரிபொருள் விலை வெகுவாக உயர்ந்தது. அதன் காரணமாக, பொருளாதார நிலைமை எதிர்வரும் வாரங்களில் மேலும் மோசமாகும். மக்கள் இதனால் மேன்மேலும் கொதித்தெழுவர். அப்போது மக்கள் போராட்டங்களும் மேன்மேலும் உக்கிரமடையலாம்.

பொருளாதார நிலைமை மேலும் மோசமாகும் போது, அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களும் தீவிரமடையும். அதைத் தடுப்பதற்காகவே ஜனாதிபதியும் பிரதமரும் சகல கட்சிகளையும் சேர்ந்தவர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்கின்றனர். எனவே, ரணில் தான் தற்போது ஜனாதிபதிக்குப் பொருத்தமான சிறந்த பிரதமர் என்பது அதன் மூலமும் நிரூபணமாகிறது.

ஆனால், எதைச் செய்தாலும் எதிர்வரும் ஏழு, எட்டு மாதங்களில், அதாவது சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும் வரை, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தால் தீர்வு காண முடியாது. ஜூன் மாதத்தில் பாரியதோர் உணவு நெருக்கடியும் வரப் போகிறது எனப் பிரதமரே கூறுகிறார். எந்தக் கூட்டரசாங்கத்தை அமைத்தாலும், அரசாங்கமும் ஜனாதிபதியும் அந்த நிலைமையை தாக்குப் பிடிப்பார்களா என்பது சந்தேகமே!

## கடிதங்கள்

### மாந்தை கிழக்கில் விதிமுறைகளை மீறிய மணல் அகழ்வு

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலியாறு, பறங்கியாறு ஆகிய பகுதிகளில் மணல் அகழ்வுகளுக்கான அனுமதிப்பத்திரம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

கடமை நாள்களில் மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு வரும் நிலையில், அனுமதிப்பத்திர விதிமுறையை மீறி, விடுமுறை நாள்களிலும் மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக, மாந்தை கிழக்கு கிராம அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இதேவேளை, பொலிஸ் மினி காவலரண் இருந்த காலப்பகுதியில், மாந்தை கிழக்கு பகுதிகளில் குற்றச்செயற்பாடுகள் மிக அரிதாகவே இடம்பெற்று வந்ததாகவும், பொலிஸ் மினி காவலரண், பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்ட பின்னர், குற்றச்சம்பவங்கள் அதிகரித்து உள்ளதாகவும், இக்குற்றச் செயல்களுக்கு பொலிஸாரும் உடந்தையாக இருப்பதாகவும் கிராம அமைப்புகள் விசனம் தெரிவிக்கின்றன.

இதேவேளை அண்மைய நாள்களில், மாந்தை கிழக்கு பகுதிகளில் நீர்ப்பம்பிகள் களவாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்த கிராம அமைப்புகள், பிரதே சபை உறுப்பினர்களுடனான கடந்த சந்திப்பில், இரவு நேர வீதி ரோந்து நடவடிக்கைக்கு ஆவன செய்வதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இரவு நேர வீதி ரோந்து நடவடிக்கையில், சிவில் பாதுகாப்பு குழு, பொதுமக்களையும் இணைத்து, ரோந்து நடவடிக்கையை செயற்படுத்துமாறும் கிராம அமைப்புகள் தெரிவித்துள்ளன.

செ. கீதாஞ்சன்



# அமைச்சரவை தீர்மானங்கள் சில

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தலைமையில், நேற்று (24) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சில.

## 1. கடன்களைப் பெற்றுக் கொள்ளல்

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நிலைமையால், எமது நாட்டுக்குத் தேவையான பெற்றோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்புடன் 500 மில்லியன் அமெரிக்க டொலர் குறுகியகாலக் கடன் வசதியும், இந்திய அரச வங்கியின் ஒத்துழைப்பின் கீழ், மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியையும் பெற்றுக்கொள்வதற்காக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல், தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துகொண்டு, தேவையான பெட்ரோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் கீழ், மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 02. பொறிமுறையை அறிமுகப்படுத்தல்

பெட்றோலியப் பொருட்களின் உள்ளூர் விலையைத் தீர்மானிப்பதற்காக, வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து செலவினங்களின் கூறுகளைக் குறித்துக் காட்டும் வகையில், விஞ்ஞான ரீதியான பொறிமுறையொன்றின் அடிப்படையில் பெற்றோலியப் பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் வகையிலான பொறிமுறையை உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான பொறிமுறையின் மூலம், பாவனையாளர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகளுக்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் முக்கிய ஆறு (06) செலவினக் கூறுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தி, பெற்றோலியப் பொருட்களின் விற்பனை விலையை மாதாந்தம் தீர்மானிப்பதற்கு இயலுமான வகையில், பொருத்தமான பரிந்துரைகளை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் தலைமையில் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கும், குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பொறிமுறைக்கமைய மாதாந்தம் பெட்ரோலியப் பொருட்களின் விலையைத் தீர்மானிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 03. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடித்தல்

தொழில் அனுமதிப்பத்திர முறையின் கீழ், கொரிய குடியரசுக்கு பணியாளர்களை அனுப்புதல் மற்றும் பொறுப்பேற்றல் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையருக்கு தென்கொரியாவில் 04 வருடங்கள் மற்றும் 10 மாதங்களை வரையான காலத்திற்கு தொழில் வாய்ப்புகள் கிடைப்பதுடன், பணியாளர்களின் செயலாற்றுகையின் அடிப்படையில் குறித்த காலப்பகுதியை மேலும் நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்புண்டு.

அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டியதுடன், இதற்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், மேலும் 02 வருடங்கள் அல்லது கொரிய குடியரசு உடன்பாடு தெரிவிக்கின்ற காலப்பகுதிக்கு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 04. சேவைக்கான பெறுகை கோரல்

இலங்கை அரசின் வெளிநாட்டு படுகடன்களை மீள்கட்டமைப்பதற்காக சர்வதேச நிதியியல் மதியுரைஞர் சேவை மற்றும் சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகை கோரலுக்காக இதற்கு முன்னர், அமைச்சரவையால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக கோரப்பட்ட விலைமனுக்களுக்கமைய, நிதியியல் மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 28 முன்மொழிவுகளும் சட்ட மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 23 முன்மொழிவுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கமைய, குறித்த இரண்டு பெறுகைகளுக்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் குறித்த பெறுகைகளை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நிதியியல் மதியுரைஞர் சேவைக்கான பெறுகை பிரான்ஸ் M/s Lazard நிறுவனத்திற்கு வழங்குதல்;

சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகை பிரான்ஸ் M/s Clifford Chance LLP நிறுவனத்துக்கு வழங்குதல்.

## 05. அமைச்சரவை இணை பேச்சாளர்கள் நியமனம்

அமைச்சரவை ஊடக இணைப் பேச்சாளர்களாக செயற்படுவதற்காக கீழ்க்காணும் அமைச்சரவை உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், (கலாநிதி) பந்துல குணவர்த்தன, விவசாய அமைச்சர் வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுடெல்லி

கொடுங்குற்றம் செய்த குற்றவாளிகளுக்கு

# மரண தண்டனை விதிக்கும் போது கவனம்

கொடுங்குற்றம் செய்த குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு முன்பாக அவர்களின் முந்தைய மற்றும் பிந்தைய நடத்தையை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அனைத்து நீதிமன்றங்களுக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் 2011ஆம் ஆண்டு பெண்கள் மூவர் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பிலேயே உச்சநீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவை பிறப்பித்துள்ளது.



இந்தக் கொலைக் குற்றத்தில் பெண்ணொருவர் உட்பட இரண்டு ஆண்களுக்கு 25 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. இது தொடர்பான மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிபதிகள், கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரில் ஒருவர், சிறையில் உள்ள கிரிக்கெட் அணியின் தலைவர் ஆகிவிட்டார். சிறையில் கிடைக்கும் சம்பாத்தியத்தை வைத்து குடும்பத்தையும் கவனித்து வருகிறார்.

மற்றொரு குற்றவாளி சிறையிலேயே தன்னார்வ தூய்மைப்பணியில் ஈடுபட்டு வருகிறார். 3வது பெண் குற்றவாளி 'எம்ரோய்டரிங்' எனப்படும் சித்திரத் தையல் கலையில் நிபுணத்துவம் பெற்றவர்.

இவற்றைச் சுட்டிக் காட்டிய நீதிபதிகள், கொலை செய்யும் போது இந்த 3 பேரின் மனோநிலை மிகவும் கொடூரமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், தற்போது அவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாக மாறி இருப்பதையும் நீதிபதிகள் சுட்டிக் காட்டினர்.

எனவே, உச்சபட்ச தண்டனை வழங்கும் முன்பாக குற்றவாளிகளின் மனநலம் சார்ந்த அறிக்கை, வயது, குடும்பப் பின்னணி, கல்வி போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜம்மு

# புதைத்ததை எதிர்த்ததால் உயிருடன் மீண்ட சிசு

ஜம்மு மற்றும் காஷ்மீரின் ராம்பன் மாவட்டத்தில் பனிஹால் நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது பங்கூத் கிராமம். அங்குள்ள ஷமீமா பேகம், நேற்றுமுன்தினம் காலை பெண் குழந்தையை பிரசவித்துள்ளார்.

எனினும், சிசு இறந்துவிட்டதென கூறிய மருத்துவமனை நிர்வாகம், இரண்டு மணிநேரம் தாமதத்தின் பின்னர், சிசுவின் சடலத்தை கையளித்துள்ளனர். உறவினர்களும் சடலத்தை கிராமத்துக்கு எடுத்துச் சென்று புதைத்துள்ளனர்.

எனினும், அந்தப் பகுதியிலுள்ள உள்ளூர்வாசிகள் தங்களது இடத்தில் புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, குழந்தையை அதன் பூர்வீக பகுதியில் புதைக்கும்படி கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த வாக்குவாதத்தின் பின்னர், ஒரு மணிநேரம் கழித்து, புதைத்திருந்த குழந்தையை குடும்பத்தினர் வெளியே எடுத்துள்ளனர்.

இதில், ஆச்சரியப்படும் வகையில் அந்த பெண் குழந்தை உயிருடன் இருந்துள்ளது. இதனை தொடர்ந்து உடனடியாக மருத்துவமனைக்கு ஓடி சென்றுள்ளனர். மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராக குடும்பத்தினரும் மற்றவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளூர்வாசிகள் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காமல் விட்டிருந்தால், குழந்தையின் கதி தெரியாமலே போயிருக்கும். 'கெட்டதிலும் ஒரு நல்லது' என்ற வகையில் நடந்த இச்சம்பவம் அந்தப் பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை

# பெண்ணுடன் உல்லாசம்; 61 வயதானவர் மரணம்

மும்பையிலுள்ள ஹோட்டலொன்றில், பெண்ணுடன் உல்லாசம் அனுபவித்த முதியவரொருவர் திடீரென மயங்கி விழுந்து பலியாகியுள்ளார். சம்பவம் தொடர்பில், 40 வயதான பெண்ணிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஹோட்டலுக்கு 40 வயதான பெண்ணொருவருடன் 61 வயதான முதியவர் காலை 6 மணிக்குச் சென்றுள்ளார். எனினும், நான்கு மணிநேரத்துக்குப் பின்னர், வரவேற்பு அறைக்கு அழைப்பை எடுத்த பெண், தன்னுடன் வந்த முதியவர், திடீரென மயங்கி கீழே விழுந்துவிட்டார் என தகவல் கொடுத்துள்ளார்.

ஊழியர்கள் சென்று பார்த்தபோது, மூச்சுப் பேச்சு இன்றி முதியவர் கிடந்துள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த ஹோட்டல் நிர்வாகம், முதிவரை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். பரிசோதித்த வைத்தியர்கள், முதியவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

முதியவருடன் தங்கியிருந்த பெண்ணை அழைத்து விசாரித்த போது, முதியவர் தன்னுடன் உல்லாசம் அனுபவித்த போது, மது குடிக்க முயன்றார். எனினும், திடீரென மயங்கி விழுந்துவிட்டார் என தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பெங்களூர்

# தலித் சாமியாரின் எச்சில் உணவை சாப்பிட்ட எம்.எல்.ஏ

பெங்களூர், சாம்ராஜ்பேட்டை தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏவான ஜமீர் அஹமதுகான் தலித் சாமியாரின் எச்சில் உணவை வாங்கி சாப்பிடமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும், சகோதரத்துவத்தை வலியுறுத்தவே தான் இவ்வாறு செய்தேன் என, அஹமதுகான் தெரிவித்துள்ளார்.

பெங்களூர், பாதராயனபுராவில் பாடசாலையொன்றில், அம்பேத்கர் ஜெயந்தி மற்றும் ஈத்மிலாத் நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்கு ஜமீர் அஹமதுகான் தலைமை தாங்கினார்.

மேலும், தலித் சமுதாயத்தை சேர்ந்த சாமியாரான நாராயண சுவாமியும் கலந்து கொண்டார். பின்னர் துப்புரவு தொழிலாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய, "ஜமீர் அஹமது கான், சாதி மற்றும் மதத்தை விட மனிதாபிமானமும், சகோதரத்துவமும் தான் பெரியது. நமது எல்லோருடைய சாதி ஒன்றே; அது மனிதாபிமானமாகும்" என்றார். அப்போது மேடையில் நின்றபடி பேசிய அவர், அங்கு வைக்கப்பட்டு இருந்த உணவை எடுத்து சாமியாரான நாராயண சுவாமியின் வாயில் ஊட்டி விட்டார். பின்னர் சாமியாரின் வாயில் இருந்து அந்த எச்சில் உணவை எடுத்து ஜமீர் அஹமதுகான் எம்.எல்.ஏ சாப்பிட்டார்.



கர்நாடகா

இந்து மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும்

# சில வரிகள் நீக்கம்; படத்தை நீக்கவில்லை



பாடப்புத்தகத்தில் இருந்து பெரியார் பற்றிய பாடத்தை நீக்கவில்லை. மாறாக, அதிலிருந்த இந்து மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும் சில வரிகள் நீக்கப்பட்டுள்ளன என்று கர்நாடக கல்வி அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

கர்நாடகாவில் பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் புதிய பாடப் புத்தக்கத்திலிருந்து பெரியார், நாராயண குரு குறித்த பகுதிகள் நீக்கப்பட்டதாக சர்ச்சை எழுந்துள்ளது.

இது குறித்து பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கர்நாடக கல்வித்துறை அமைச்சர் பி.சி.நாகேஷ் கூறியதாவது: "சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங், சமூக சீர்திருத்தவாதிகளான நாராயண குரு, ஈவெரா பெரியார் அல்லது 18ஆம் நூற்றாண்டில் மைசூர் மன்னராக இருந்த திப்பு சுல்தான் பற்றிய எந்தவொரு பாடமும் நீக்கப்படவில்லை. பாடப்புத்தகத்தில் சில திருத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன.

பெரியார் பற்றிய பாடம் நீக்கப்படவில்லை. மாறாக அதில் இடம் பெற்றிருந்த இந்து மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும் சில வரிகள் நீக்கப்பட்டுள்ளன" என்றார்.

மகாராஷ்டிரா

# பருத்தியில் உருவாகும் மறுசுழற்சி நாப்கின்கள்

மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தப்படும் சானிட்டரி நாப்கின்கள் (அணையடை ஆடைகள்) பக்கவிளைவுகளை ஏற்படுத்தாததாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அமைந்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு பெண்களிடம் அதிகரித்து வருகிறது.

பிளாஸ்டிக் மூலக்கூறுகளால் தயாரிக்கப்படும் நாப்கின்களுக்கு மாற்றாக பருத்தி, மரக்கூழ், வாழை நார், கரும்பு சக்கை போன்ற இயற்கை மூலப்பொருட்களை கொண்டு உற்பத்தி செய்யப்படும் நாப்கின்களுக்கு மவுசு கூடி வருகிறது.

அந்த வாய்ப்பை கனகச்சிதமாக கையாண்டு தொழில்முனைவோர்களாக மாறி, நாப்கின் தயாரிப்பில் பல மடங்கு லாபம் ஈட்டி வருகிறார்கள்.

அப்படிப்பட்ட தொழில் முனைவோர்களுள் ஒருவராக விளங்குகிறார், சுஜாதா பவார். மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள தானே பகுதியை சேர்ந்த இவர், மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய இயற்கை சானிட்டரி நாப்கின்களை 2021 ஒகஸ்ட் மாதம் உருவாக்கினார்.

கடலூர்

தில்லை நடராஜர் ஆபாசமாக சித்திரிப்பு;

# சிதம்பரத்தில் சிவனடியார்கள் எதிர்ப்பு

சிதம்பரம் தில்லை நடராஜா, தில்லை காளி தெய்வங்கள் குறித்து சமூக வலைதளங்களில் ஆபாசமாக பதிவு செய்ததைக் கண்டித்தும், அதன் நிர்வாகியைக் கைது செய்ய வலியுறுத்தியும் சிவனடியார்கள் கூட்டமைப்பு சார்பில் சிதம்பரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சம்பந்தப்பட்ட சமூக வலைதள நிர்வாகியை கைது செய்யக் கோரி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிவனடியார்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், 'தமிழகத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் இதுகுறித்து பல அமைப்புகள் சார்பில் புகார் அளித்தும், சம்பந்தப்பட்டவர் மீது எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையில் இல்லை' என்று கூறி தமிழக அரசை கண்டித்து முழக்கமிட்டனர்.

ஈரான்

10 மாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்து விபத்து:

# 10 பேர் உயிரிழப்பு

ஈரானின் தெற்கு நகரமான அபாடானில் நேற்று முன்தினம் (23) பத்து மாடிக் குடியிருப்புக் கட்டடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில், 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
மேலும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள 80 க்கும் மேற்பட்டவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இவ்விபத்து இடம் பெற்றமைக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

# நடுவானில் பிறந்த குழந்தை

## விசித்திரப் பெயர் சூட்டிய பெற்றோர்

அமெரிக்காவின் கோரோலடோ மாகாணத்தில் இருந்து புளோரிடா மாகாணத்திற்கு 'ப்ரன்டியர்' ஏர்லைன்ஸ் விமானத்தில் டயானா கிரால்டோ என்ற கர்ப்பிணிப் பெண் அண்மையில் பயணம் மேற்கொண்டுள்ளார்.

எனினும் அவர் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இதை அடுத்து விமானத்தில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது. இந்த விடயம் விமானி கிரிஸ் நைஸ் என்பவரிடம் பகரப்பட்டது.

பதட்டம் கொள்ளாத கிரிஸ், அங்கிருந்த விமான ஊழியர்கள் மற்றும் சக பயணிகளின் உதவியுடன் பிரசவம் பார்க்க அவர்கள் முடிவெடுத்தனர்.

விமானத்தின் பறக்கும் கட்டுப்பாட்டை முழுமையாக எடுத்துக்கொண்ட விமானி கிரிஸ், தரையிறங்கும் இடத்தில் மருத்துவ குழுவை தயார் நிலையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில், விமான ஊழியர்கள் மற்றும் சக பயணிகள் உதவியுடன் மகப்பேறு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, அந்த கர்ப்பிணிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இப் பிரசவத்தில் தாயார் டயானா சிறப்பான ஒத்துழைப்பு தந்ததாக கிரிஸ் தெரிவித்தார். அவரின் தன்னம்பிக்கையும் அமைதியும் சிறந்ததும் மிகவும் பாராட்டத்தக்கது என கிரிஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நிலையில் நடு வானில் பிறந்த இக் குழந்தைக்கு வானம் என பொருள்படும் Sky (ஸ்கை) என்ற பெயரை சூட்ட அவரது பெற்றோர் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வடகொரியா

இராணுவ உயர் அதிகாரியின் உடலைச் சுமந்து சென்று

# அடக்கம் செய்த கிம்

வடகொரியாவில் உடல் நலக்குறைவால் உயிரிழந்த இராணுவ உயர் அதிகாரியான ஹியோன் சோல் ஹே என்பவரின் இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் (23) நடைபெற்றன.

இந்நிலையில் குறித்து மரணச் சடங்கில் கலந்து கொண்ட வட கொரிய ஜனாதிபதி கிங் ஜொங் உன், இராணுவ அதிகாரியின் உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டியைச் சுமந்து சென்று, இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.
கிங் ஜொங் உன், ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வது இதுவே முதல்முறை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

# இம்ரான்கான் கட்சியினர் 100 பேர் கைது

பிரமாண்ட பேரணி நடத்த திட்டமிட்டதால் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் 100க்கும் மேற்பட்ட தெக்ரிக்-இ-இன்சாப் கட்சியினரை பொலிஸார் கைது செய்தனர்.

தனது அரசை வெளிநாட்டு சக்தி, சதி செய்து கவிழ்த்து விட்டதாகவும், உடனே பொதுத்தேர்தலை நடத்த வேண்டுமென்றும் இம்ரான்கான் வலியுறுத்தி வருகிறார்.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரமாண்ட பேரணி, பொதுக்கூட்டத்தை இன்று (25) நடத்த இம்ரான்கான் கட்சியினர் திட்டமிட்டனர். இதையடுத்து இஸ்லாமாபாத்துக்கு பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சியினர் செல்ல தயாராகி வருகிறார்கள்.

இந்த நிலையில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் 100க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சியினரை பொலிஸார் கைது செய்தனர்.

ரஷ்யா

# அடிமேல் அடிவாங்கும் ரஷ்யா

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. அதேபோல் உக்ரேனும் தம்மை தற்காத்துக் கொள்ள ரஷ்யப் படைகள் மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.
இம் மோதலில் இரு நாடுகளிலும் அதிக அளவில் உயிர் இழப்புகளும் பொருள் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களான மைக்ரோசொப்ட், அப்பிள் மற்றும் சர்வதேச பணப்பரிவர்த்தனை நிறுவனங்களான விசா, மாஸ்டர் கார்ட், நெட்பிளிக்ஸ் உள்ளிட்ட பல நிறுவனங்கள் தமது சேவையை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளன.

குறிப்பாக, அண்மைக்காலமாக மெக்டொனால்ஸ், ரெனால்ட் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் ரஷ்யாவில் இருந்து வெளியேறி வருவதோடு, தங்களது சொத்துகளை விற்பனை செய்தும், உள்ளூர் நிறுவனங்களிடம் ஒப்படைத்தும் ரஷ்யாவுடனான தங்களது வர்த்தகத்தை முறித்து வருகின்றன.

அந்தவகையில் கடந்த 15 ஆண்டுகளாக ரஷ்யாவில் இயங்கிவந்த ஸ்டார்பக்ஸ் நிறுவனமும் தற்போது அங்கிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபலமான ஸ்டார்பக்ஸ் நிறுவனம் ரஷ்யாவில் 130 கிளைகளுடன் 2,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா வெளியிட்ட அதிரடி அறிவிப்பு

உலகம் முழுவதும் போர், வன்முறை, மனித உரிமை மீறல்கள், பொருளாதாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகள், பல பகுதிகளில் நிகழ்ந்து வருகின்றன.

இதனால் மக்கள் தங்களின் நாடுகள், இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, உக்ரேன், சிரியா, ஏமன், ஈராக், எத்தியோப்பியா, பர்கினோ பாசோ, மியான்மார், நைஜீரியா, ஆப்கானிஸ்தான், கொங்கோ குடியரசு ஆகிய நாடுகளில் உள்நாட்டு போர் உள்ளிட்ட பல காரணங்களால் அந்நாடுகளில் இருந்து மக்கள், வேறு நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து செல்கின்றனர்.



இந்நிலையில், உலகம் முழுவதும் இதுவரை 10 கோடிக்கும் அதிகமான மக்கள் தாங்கள் வாழ்ந்து வந்த பகுதியில் இருந்து போர் உள்ளிட்ட பல காரணங்களுக்காக இடம்பெயர்ந்துள்ளனர் என ஐநா சபை தெரிவித்துள்ளது.

மேலும் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையானது 10 கோடியைத் தாண்டியுள்ளமை இதுவே முதல்முறை எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை எதிர் பங்களாதேஷ் 2ஆவது டெஸ்ட்:

# இரண்டு அணிகளும் முன்னிலைக்கு போராட்டம்



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பமான இரண்டாவது போட்டியில் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், கசின் ராஜித (3), அசித பெர்ணாண்டோவிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியது. பின்னர் முஷ்பிக்கூர் ரஹீமின் ஆட்டமிழக்காத 175, லிட்டன் தாஸின் 141 ஓட்டங்களின் மூலம் கௌரவமான நிலையை அடைந்தபோதும் மீண்டும் ராஜித, பெர்ணாண்டோவிடம் தலா 2 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை, ஒஷாட பெர்ணாண்டோ, அணித்தலைவர் திமுத் கருணாரத்ன மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.



பின்னர் 57 ஓட்டங்களுடன் ஒஷாட பெர்ணாண்டோ எபொடொட் ஹொஸைனுடன் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த குசல் மெண்டிஸும் சிறிது நேரத்தில் ஷகிப் அல் ஹஸனிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில், நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 143 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் கருணாரத்ன 70 ஓட்டங்களுடனும், ராஜித ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

# கிண்ணியா அக்ஸேரியன் சுப்பர் லீக் தொடர்



ஒலுமுதீன் கியாஸ்

இவ்வாண்டுக்கான கிண்ணியா அக்ஸேரியன் சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரானது எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ளது.

இத்தொடர் சம்பந்தமான தெளிவூட்டல் கூட்டமானது, கிண்ணியா மிஷன் மண்டபத்தில் அக்ஸேரியன் லீக்கின் தலைவர் எம்.எம். ரசாத் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற போது அதன் ஸ்தாபகத் தலைவர் ஏ.எல்.ஏ. நபீல் இதனைத் தெரிவித்தார்.

ஜூன் மாதம் 1, 2, 3 ஆகிய திகதிகளில் போட்டிகள் நடைபெற்று, ஜூன் மாதம் 4ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெற உள்ளது.

இத்தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்குபற்றவுள்ளன.

அக்ஸேரியன் சுப்பர் போய்ஸ், அக்ஸேரியன் வொரியர்ஸ், அக்ஸேரியன் சுப்பர் பைட்டர்ஸ், அக்ஸேரியன் சுப்பர் கிங்ஸ், அக்ஸேரியன் றேஸிங் ஸ்டார், அக்ஸேரியன் பிளக் பந்தர், அக்ஸேரியன் புளூ ஈகிள், அக்ஸேரியன் ஜூப்பிட்டர்ஸ் ஆகிய அணிகளே இத்தொடரில் மோதவுள்ளன.

கடந்த 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கிண்ணியா அல் அக்ஸா கல்லூரில் கல்வி கற்று விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த வீரர்களைக் கொண்டு இந்த சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

எட்டு அணித் தலைவர்களும் பங்குபற்றிருந்த இந்தத் தெளிவூட்டல் கூட்டத்தின் போது, அணித்தலைவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டதோடு, 2022ஆம் ஆண்டின் அக்ஸேரியன் சுப்பர் லீக்கின் உத்தியோகபூர்வ இலட்சினையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

# றியல் மட்ரிட் கனவு முடியவில்லை–மப்பே

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டுக்காக ஒரு நாள் விளையாடும் கனவானது, புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டு பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனில் இருக்கின்றபோதும் எப்போதும் முடியவில்லை என கிலியான் மப்பே தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் எனத் தெரியாது என 23 வயதான மப்பே கூறியுள்ளார்.



# அவுஸ்திரேலியாவின் உதவி பயிற்றுவிப்பாளராக வெற்றோரி

அவுஸ்திரேலிய ஆண்கள் கிரிக்கெட் அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளராக நியூசிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் டேனியல் வெற்றோரி நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாற இறுதியில் ஆரம்பமாகும் இலங்கைக்கெதிரான தொடருடன் தனது பணியை வெற்றோரி ஆரம்பிக்கவுள்ளார்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கான சுற்றுப்பயணத்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளின்போது அவுஸ்திரேலியாவுடன் வெற்றோரி பணியாற்றியிருந்தார்.



# பங்களாதேஷிலிருந்து மீள அழைக்கப்படும் மிஷார

பங்களாதேஷிலிருந்து கமில் மிஷாரவை மீள அழைக்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

தனது சுற்றுப்பயண ஒப்பந்தத்திலுள்ள வீரர் நடத்தை விதிகளை மீறியது எனக் கூறப்படுவது தொடர்பாகவே மிஷார மீள அழைக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில், பங்களாதேஷுக்கெதிரான 18 பேர் கொண்ட இலங்கைக் குழாமிலுள்ள மிஷார, உடனடியாக இலங்கைக்கு வரவுள்ளார். மிஷார வந்தவுடன், மீறல்கள் தொடர்பில் முழுமையான விசாரணையொன்றை இலங்கை கிரிக்கெட் சபை நடாத்தவுள்ளதுடன், விசாரணையின் முடிவில் மிஷார தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 25 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.